

23 MAR 1972

Registered as a News Paper in Ceylon
விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily
தேசிய தினசரி

மலர் 14
இதழ் 42

தபால் பெட்டி எண் 49
போன் 389

யாழ்ப்பாணம் பங்குனி 10 ஸபர் 7 வியாழக்கிழமை (23-3-72)

வாடிக்கையாளப் பெருமக்களுக்கு
ஓர் நற்செய்தி!
புதுவருடதினத்தை முன்னிட்டு
எதிர்வரும் 25ந்திகதி முதல்
சிந்தெட்டிக் சூட்டிங், சேட்டிங்,
பிளெயின் அன்ட் பிரின்டெட்
நைலக்ஸ் வகைகள்
கட்டுப்பாடு விலக்கு
கிடைக்கும்
ராஜ்கோபால்ஸ்
பிரபல ஜவுளி மாளிகை)
பெரியகடை — யாழ்ப்பாணம்.

யாழ். நவீன மார்க்கட் நாளை கையளிக்கப்படும்

வேலைகள் யாவும் பூர்த்தி

'மைற்' ஸ்தாபன அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் வேலைகள் யாவும் முடிந்துவிட்டதென்றும், நாளை நவீன மார்க்கட், யாழ். மாநகர சபையிடம் பாரமெடுக்கப்படுமென்றும், நவீன மார்க்கட்டை நிர்மாணித்த 'மைற்' ஸ்தாபன அதிபர் டாக்டர் சேனபால பிலிமதலாவே நேற்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.

நவீன மார்க்கட்டிலுள்ள கடைகளின் வேலைகளெல்லாம் பூர்த்தியடைந்துவிட்டதாகவும், தண்ணீர் தாங்கி வேலைமட்டும் நடந்துகொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தண்ணீர் தாங்கி வேலைகளும், நவீன மார்க்கட் திறப்பு விழாவிற்கு முன் பூர்த்தியடைந்துவிடுமென்றும், அவர் மேலும் சொன்னார். 25 அடி உயரத்தில் தண்ணீர் தாங்கி நிறுவப்பட்டுவருகிறது.

மேல்மாடியில் ஒவ்வொரு கடைகளின் முகப்பிற்கும் கண்ணாடி போடப்பட்டிருக்கிறது. நவீன மார்க்கட்டிற்குள்ளே நான்கு மலசலகூடம் அமைக்கப்பட்டுள்ளன.

மீன், இறைச்சிக் கடைகள் அதற்கு ஏற்ற விதத்தில் வசதியாகக் கட்டப்பட்டிருக்கிறது. நவீன மார்க்கட்டை சுத்தம் செய்யும் வேலைகள் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

யாழ் மாநகரசபையின் மராமத்து பகுதியினர் நேற்று முன்தினம் மார்க்கட்டைப் பார்வையிட்டுச் சென்றனர்.

நவீன மார்க்கட் திறப்புவிழா அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறுமென மேயர் திரு அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

இந்திய நீச்சல் வீரர்

18-30 மணி நேரத்தில் இந்தியக்கரை அடைந்தார்

சென்னை, மார்ச் 22 இந்திய நீச்சல் வீரர் திரு நாகபாய் பாஹடே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக்கு நீரிணையை 18 மணி 30 நிமிடங்களில் நீந்திக் கடந்துள்ளார்.

18 மைல் தூரமுள்ள இந்த நீரிணையை இலங்கையின் தலைமன்னாரிலிருந்து செவ்வாய்க்கிழமை காலையில் நீந்த ஆரம்பித்தார். நேற்று இரவு 11 மணியளவில் அவர் தனுஷ்கோடிக் கரையை அடைந்தார். கடலில் சுழியும் கொந்தளிப்புமாகவிருந்ததால் திரு பாஹடே வளைந்து வேறு வழிகளில் நீந்தவேண்டியிருந்தது. சுழிகள் அதிகமாகவிருந்ததால் கரையை அடைவதற்கு ஒரு கிலோமீட்டர் இருக்கும்போதே அவர் திசைப்படலை ஏறிக்கொண்டார். 29 கிலோமீட்டர் தூரத்தைச் சுற்றி வளைத்து நீந்தவேண்டியிருந்ததால் 40 கிலோமீட்டருக்குமேல் அவர் நீந்தியிருப்பாரென்று கருதப்படுகின்றது.

ஆரம்பித்தார்

செவ்வாய்க்கிழமை அதிகாலை சுமார் மூன்றரை மணியளவில் இந்திய நீச்சல் வீரரான திரு நாகபாய் பாஹடே தலைமன்னார் ஊர்மனைத் துறையிலிருந்து தனுஷ்கோடிவரையிலான தமது நீச்சலை ஆரம்பித்தார். கூடவே வைரம் சாக்கனான செல்வி சாவ்னி தமகேரும், இரு எம் டி படகிலும் நீந்திச் சென்றனர்.

நீச்சல் ஆரம்பமான முதல் மணித்தியாலத்திலேயே அவர்கள் மூன்று மைல்களுக்குமேல் நீந்திவிட்டனர். செவ்வாய் பகல் பன்னிரண்டு மணியளவில் திரு. நாகபாய் பாஹடே பாதி தூரத்தை நீந்தி கடந்துவிட்டாரென்று கடைசியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நீச்சல் ஆரம்பமாவதற்கு முன்னர் இரவில் கப்பலில் நீச்சல் வீரர்களையும் வைரம் குழுவினரையும் கௌரவிக்குமுகமாக விருந்தொன்று இடம்பெற்றது. பல பிரமுகர்கள் அதில் பங்குபற்றினர்கள். மேற்படி நீச்சல் வீரர்களுக்குப் பாதுகாப்பு, சுகாதார வசதிகளை அளிப்பதற்காக இலங்கை கப்பற்படை ரோந்துபடகுகளும் இந்திய மோட்டார் வள்ளங்களும் சேவை ஏற்பாடாகியிருந்தன.

(திருக்கேதீ. நி)

9,820 தாதிகள்!

கோட்டை புதன் இவ்வருடம் ஆஸ்பத்திரிகளுக்கு மேலும் 400 தாதிகளைப் பயிற்சிக்கு தெரிவுசெய்ய சுகாதார இலாகா நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்தவருடம் தெரிவு செய்யப்பட்ட 400 தாதிகள் நாட்டிலுள்ள தாதிகள் பயிற்சிக் கல்லூரிகளில் தற்போது பயிற்சிபெறுகிறார்கள்.

5 ஆண்டுத்திட்டம் அமுல் நடத்தப்பட்டு முடிவுற்றதும் நாட்டில் 9820 தாதிகள் கடமையாற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க இருநாடுகளும் நடவடிக்கை

கொழும்பு புதன் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் சட்டவிரோதக்குடியேற்றமே பெரும் பிரச்னையாக இருந்துவருவதாக உயர்மட்ட மாநாட்டில் இருநாட்டு பொலிஸ் அதிகாரிகளும் ஒப்புக்கொண்டனர். கொழும்பில் இந்த இலங்கை இந்திய பொலிசின் உயர்மட்ட மாநாடு நடைபெற்றது.

கள்ளக்கடத்தலை முறியடிப்பதும், சட்டவிரோதகுடியேற்றத்தைத் தடுப்பதற்குமான விஷயங்கள் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது.

தென்னிந்தியாவுக்கும் இலங்கையின் வடபகுதிக்குமிடையில் இவ்விஷயங்கள் குறித்து விரைவான தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்வதற்கு வானொலித் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இம்மாநாட்டில் யோசனை தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதக் குடியேற்றமே இன்றைய மாநாட்டில் முக்கிய பிரச்னையாக எடுக்கப்பட்டது.

சட்டவிரோதக்குடியேற்றத்தைத் தடுப்பதற்கு மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்வது சம்பந்தமாக அடுத்த 6 வாரத்தில் விஷேட மாநாடு ஒன்றை தென்னிந்தியாவில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பெப்ரவரி மாதத்துடன் முடிவடைந்த கடந்த 6 மாத காலத்தில் இலங்கை 148 சட்டவிரோதகுடியேற்றக்காரர்களைக் கைதுசெய்தது. இருநாட்டு புள்ளி விபரங்களின்படி இந்த விபரங்கள் தெரியவந்தன.

கடந்த முழுவருடத்திலும் தென்னிந்திய பொலிசார் பதினொரு தரகர்களையும் மற்றும் 20 பேர் இலங்கைக்குச் செல்ல முயன்றதாகவும் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் பிரச்னையில் தமது முழு ஒத்துழைப்பையும் அளிப்பதாக இருநாட்டு உயர் அதிகாரிகள் உறுதியளித்தனர்.

சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுப்பதற்கென ராமேஸ்வரத்திலுள்ள தனிப்பிரிவு 38 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களைக் கைதுசெய்ததாகவும் 7 இலங்கையர் பிரயாணத்துக்கான தஸ்தாவேஜுக்கள் இல்லாத காரணத்துக்காகவும் கைது செய்யப்பட்டனர்.

இருநாட்டு பொலிஸ் உயர்தர மாநாட்டில் தமிழ் நாட்டு துணை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு கிருஷ்ணராஜ், வட பிராந்திய உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு வன்டென்ஸ், வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம், சட்டவிரோத குடியேற்ற தடுப்புப்பகுதி பொலிஸ் அதிபர் திரு கே. வி இராமநாதன் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். (பி டி ஐ)

மண்வெட்டியால் என் மகனை வெட்டினர்

வவுனியாக் கொலை வழக்கு

யாழ்ப்பாணம், வியாழன் "நான் ஓடிப்போனபோது என் மகன் செல்லத்துரை தலைநிமிர்ந்து எழும்பிக்கொண்டிருந்தார். அப்பொழுது எதிரி கந்தையா மண்வெட்டியால் ஓங்கி வெட்டிவிட்டு என்னை நோக்கி ஓடி வந்தார். எதிரி என் சொந்தச் சகோதரன்."

வவுனியா கோவில்குளம் கொலைவழக்கில் சாட்சியமளித்த தம்பாப்பிள்ளை செல்லையா மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு நேற்று காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் சி ஜி வீரமந்திரி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1970ம் ஆண்டு அக்டோபர் 2ந் தேதி வவுனியாவில் செல்லையா செல்லத்துரையைக் கைமோசமாக கொலைசெய்ததாக தம்பாப்பிள்ளை கந்தையா என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

மரண அறிவித்தல்

வைரவப்பிள்ளை சுப்பிரமணியம்

வயிரவப்பிள்ளை சுப்பிரமணியம் (செக்கிலா மாஸ்டர் யூனியன் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியர்) இறைவனடி சேர்ந்தார். இவர் சிவஞானசீலர் (ஆசிரியர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) விமலநாதன், திருநாவுக்கரசு (இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி) மலர்மகள், நீலாம்பிகை ஆகியோரின் தந்தையும் க. சிரமநாதர் (உதவி இறைவரி திணைக்களம்) C S சண்முகலிங்கம் (உதவி திட்டமிடல் அமைச்சு) ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று வியாழக்கிழமை பி ப 4 மணிக்கு தெல்லிப்பழை இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும்.

415

இன்று மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
விஜயகுமாரி நடித்த
மூச்சரம் மா

யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 9-30
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ
நடித்த
நேர் வழி

மனோகரா
[யாழ்ப்பாணம்]
ராஜன் — புஷ்பலதா
நடித்த
தினசரி 2-30 6-30, 10-00 சனி, ஞாயிறு 10-30
மகிழம்பூ

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-00, 6-00
சிவாஜி - ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
சவாலே சமாளி

இத்துடன்
பயங்கரவாத இயக்கத்தின் முக்கிய காட்சிகள் 2-00 6-00 மணி காட்சிகளுக்கு மட்டும் 60 நிமிடங்கள் காண்பிக்கப்படும். பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேஷ ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

தினசரி காலை 10-30 இரவு 10.00
சிவாஜி-
கே ஆர் விஜயா நடித்த
திருடன்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
இன்று மட்டும்
காலை 10-15 பி ப 2-15
குத்து விளக்கு

சிவாஜி-சாவித்திரி
நடித்த
மாலை 6-15 இரவு 9 45
நாளை முதல் 4 காட்சிகள்
திருவிளையாடல்
ஈஸ்மன் கலர்
புத்தம் புதிய கொப்பி

நியூ [illegible]
[இணுவில்]
நாளை முதல்
சிவாஜி நடித்த
தெய்வ மகன்

இன்று மட்டும் மாலை 4-30 THE MAIN KAMPF
பி. ப. 6-30, 10-00 செம்மீன்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு காலை 10-30
எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - தேங்காய் சீனிவாசன் - சோ
நடித்த
சத்யா மூவிஸாரின் ஈஸ்ட்மென் வர்ணச்சித்திரம்
ரிக்ஷாக்காரன்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர் ★ ஜமுனா
★ பேபிராணி
★ நாகேஸ்
நடித்த
குழந்தையும் தெய்வமும்

இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம்

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் உள்ள கைத்தொழில் பேட்டைக்கு பின்வருவனவற்றை விநியோகிக்க ஏராக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 3-4-72-ம் திகதி காலை 10 மணிவரை கேள்விச்சபை தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி இல.
S/B/Q/196/72
விபரங்கள்

3/4", 1/2", 1", 1 1/2", 2" அளவிலான பொறியால் நொறுக்கப்பட்ட கண்ணும்புக்கள்.

4", 12"—3" கண்ணும்பு சல்லிகள்.

எண்டாவலை அல்லது நாவற்கோவில் ஆற்றுமணல் குழிமண்.

கேள்விப்பத்திரங்களையும் விபரங்களையும் கீழ் கையெழுத்திடப்பட்டவரிடமிருந்து 29-3-72-ம் திகதி நண்பகல் 12 மணிவரை வழமையான வேலைநேரங்களில் ரூபா 2-00 திரும்பப் பெறப்படும் கேள்வி வைப்புப் பணமாகவும் ரூபா 10/- திரும்பப் பெறமுடியாத கேள்விப் பணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான விநியோக
காரியாதிகாரி
120, டபிள்யு. ஏ. டி.
ராமநாயக்க மாவத்தை,
த. பெ. எண் 194,
கொழும்பு-2.
11-3.1972 4052

R[illegible]AL (Jaffna)
Daily 5-00, 7-15 p.m.
Sat. Sundays 10 30 a.m.
Clint Eastwood
Telly Savalas
in
KELLY'S HEROES

தினசரி இரவு 9-45 மட்டும்
ஜெமினி-சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை

நாகப்ஸ் சினிமா
[illegible]
தினசரி 4-30 மட்டும்
சனி ஞாயிறு 10-30
TOPAZ

தினசரி 6-30, 9 45
சனி ஞாயிறு 2-30
காதல் ஜோதி

பவானி
மூளாய்
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
ரங்காராவ்-அஞ்சலிதேவி
நடித்த
பக்த பிரகலாதா

சாந்தி
(சங்கானை)
தினசரி 6-30, 9-30
ஜெ. ஜெமினிகணேசன்
சாவித்திரி
நடித்த
கற்புக்கரசி

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - பத்மினி
வியட்நாம் வீடு

வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் ஓட்டுவேலைகள் பல்லுச் சக்கரம் வெட்டுதல் (Gear whe l cutting என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும் ராஜா மெஷின் கொம்பனி 95 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 4162

அறிவித்தல்
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் கட்டாக்காலியாகத் திரியும் எல்லா நாய்களையும் பிடிப்பதற்கு சபையால் ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். பொது இடங்களில் காணப்படும் நாய்கள் எல்லாவற்றையும் பிடிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இச்சபையில் 1972ம் ஆண்டிற்குரிய உத்தரவுப் பத்திரம் பெற்ற அடையாளக் கொடுக்கப்படும், நாய்களுக்கு அணியும் பட்டியை அணிந்திருக்கும் நாய்கள் பிடிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தரப்படுகிறது.

சம்பந்தப்பட்ட உத்தரவுப் பத்திரத்தைப் பெறுவதன் மூலம் ஏற்படவிருக்கும் அசௌகரியங்களை பொதுமக்கள் தவிர்க்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒப்பம்
க. சிவஞானம்
பதில் மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.
மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்
13-3-72. 4039

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அறிவித்தல்

மேற்படி சங்கத்திற்கு 3 இணை முகாமையாளர் தேவை.

1. வயது:- 21க்கு மேல் 30க்குள் இருக்க வேண்டும்.
2. தராதரம்: கல்விப் பொது தராதரப் பத்திர வகுப்பு சாதாரண தரம் ஒரே முறையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும்.
3. சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவராக இருக்கவேண்டும்.

விண்ணப்பம் பதிவுத் தபால் மூலம் 2-4-1972 பகல் 12 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் "பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் வல்வெட்டித்துறை" என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
4057

கூலியாட்கள் தேவை

உத்தரவாத விலையில் நெல் நடைபெறும், சுன்னாகத்திலுள்ள நெற் களஞ்சியத்திற்கு கூலியாட்கள் தேவை.

(1) 18 வயதிற்கு மேற்பட்டவரும், 35 வயதிற்குட்பட்டவர்களும்.

(2) தேகாரோக்கியமும், திடகாத்திரமும் உள்ளவர்கள் 30-3-1972ற்கு முன் (பொது முகாமையாளர், சுன்னாகம் பல நோ. கூ சங்கம். சுன்னாகம்) என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இங்ஙனம்
கூட்டுறவுச்
சேவையிலுள்ள
க. இராமச்சந்திரன்
காரியதரிசி
4056

தேவை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின்சார வசதியுடன் கூடிய தனிப்பட்ட வீடு, பின்வளவு வசதியுடன் வாடகைக்கு தேவை. தொடர்புகொள்ளவும் ஓ. கண்ணுமணி, பே/பா. எஸ். சண்முகராசா, 75 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 4119

ஒரு வியாபாரஸ்தாபனத்தில் வேலைசெய்வதற்கு குமாஸ்தாக்கள் தேவை. மாத வேதனம் 150/- பிணைப் பணம் 500/- 24 3 72 காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும். பரணி ஹோட்டல் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4.76

விற்பனைக்கு

மெயின்றேடியோ (புஞ்சான்டு ஜேர்ன், டிரான்ஸிஸ்டர் (புஷ்), பறறறி டெலிபான்), சீலிங் பான், மேசைக் கடிகாரம், றலிசைக்கிள், ஆசியன் ரீபாஸ் (றலி), பீடிங் ரீபாஸ் (நெஷனல்) விற்பனைக்குள்ளன. நேரில் பார்வையிடலாம். பி. ஐ. பெர்னாண்டோ (மல்லாட்டுப்பவர் கம்பனிசோதனர்) 51, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 4174

புதுவருடம் சித்திரை தொடக்கம் 12 மாசப் பலன்களுள்ளது. யாழ்ப்பாணம், மூளாய், பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், பளை, பரந்தன், கொழும்பு என்னும் இடங்களில் கிடைக்கும். ஆயர்பாடி ராசிபுத்தகம். 4103

3. H. P. Petrol Engine
மிகத்திறமானதும் நுட்பமான வேலைப்பாடுடைய ஒரு சிறிய என்ஜின். இது ஒரு எண்ணெய் அடிக்கும் 1" பம்புடன் இணைக்கப்பட்டு இருக்கிறது. வேறு விபரங்களுக்கும் இதைப் பார்ப்பதற்கும் மானிப்பாய் ஆஸ்பத்திரி ஒழுங்கை, 21 இலக்க வீட்டில் விசாரிக்கவும். 4170

யாழ் வீதி, காங்கேசன்துறை ஸ்ரீ சம்பாக புடவைக்கடையிலுள்ள மூன்று அறைகளும் நான்கு ஷோகேசுகளும், சொற்பபடவைகளும் விற்பனைக்குண்டு விரும்புவோர் இக்கடையை சொந்தமாக எடுத்து நடத்தவும் வசதி செய்யப்படும். விபரங்களுக்கு கடை முகாமையாளர் க. சின்னத்துரையுடன் தொடர்பு கொள்ளவும் 4210

சோதிடம்

உங்களுடைய எதிர்காலக் கல்வி, காதல், கல்யாணம், தொழில் பற்றிய செய்திகளை திகதிகளுடன் பெறுதற்கு காலையில் வாருங்கள். நேரே பார்க்க 5/- சாதகம் பார்க்க 7/50 வ. மாணிக்கம், அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 4106

நட்சத்திரம், வயது, பூவின் பெயர், 60க்குள் ஒரு இலக்கம் குறித்து முத்திரையுடன் கடிதமூலமும் நேரிலும் பதில் பெறலாம். இலவச ஆரூடம், டாக்டர் ந. சண்முகராஜா ஜே. பி. கொக்குவில். 4175

கல்வி

முதலாந்தர, இரண்டாந்தர மூன்றாந்தர சிங்கள தேர்ச்சிப் பரீட்சைக்கான வழிகாட்டி தமிழிலோ ஆங்கிலத்திலோ பெற விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். மு. குணரத்தினம், வட்டு-கிழக்கு, சித்தங்கேணி. 41?2

வங்காள தேசத்தை அங்கீகரிக்க யு.எஸ். செனட் வற்புறுத்து

பிரதிநிதிகள் சபையும் பரிசீலிக்கின்றது

வாஷிங்டன், மார்ச் 22 வங்காள தேசத்தை அங்கீகரிக்கும்படி அமெரிக்க அரசை வற்புறுத்தும் தீர்மானம் ஒன்று அமெரிக்க செனட்சபையில் ஏகமனதாக நிறைவேறியது.

வங்காள தேச குடியரசை நிக்சன் நிர்வாகம் சுதந்திரமான சுயாட்சிக் குடியரசாக அங்கீகரிக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானத்தை 29 செனட்டர்கள் கூட்டாகச் சமர்ப்பித்தனர். இத்தீர்மானத்தை சமர்ப்பித்துப் பேசிய செனட்டர் பிராங்சேர்ச் இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்ட போரில் நிக்சன் நிர்வாகம் கடைப்பிடித்த கொள்கையைக் கடுமையாகக் கண்டித்தார். அமெரிக்கா தெற்காசியா பற்றிய தனது கொள்கையை புனராலோசனை செய்யவேண்டும். இதற்கு முன்னோடியாக வங்காள தேசத்தை அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டும். உலகில் 55க்கு மேற்பட்ட நாடுகள் வங்காளதேசத்தின் யதார்த்த நிலையை அங்கீகரித்தபின் அதைப்பற்றி மேலும் தாமதிப்பதில் எவ்வித நியாயமுமில்லை. அமெரிக்க மக்கள் வங்காளதேச மக்களுக்கு என்றும் அனுதாபமுடையவர்களாகவே இருந்துள்ளனர் என்றார்.

இத்தீர்மானம் குரல் மூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஒருவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை.

இவ்விதமான தீர்மானம் முன்னர் செனட்டின் வெளியுறவுக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதேபோன்ற தீர்மானம் ஒன்று அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் பரிசீலனையில் இருக்கிறது.

பரப்புக்கடந்தான் கர்த்தர் திருநாள்

மன்னார், புதன் மன்னார்ப் பகுதியிலுள்ள 'பரப்புக்கடந்தான்' கிராமத்தில் கர்த்தர் திருநாள் இன்று 23-ம் திகதி ஆரம்பமாகி 24-ந் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவுறும். வெள்ளிக்கிழமை பகல் கர்த்தர் சொரூபத்தை அடம்பன் பங்குக்குரு வண. பிதா இலறி ஜெயநேசன் அடிகளார் திரைநீக்கம் செய்துவைப்பார்.

வலைகள் இல்லையாம்

ஊர்காவற்றுறை, புதன் கடற்றொழிலையே நம்பி வாழும் மீனவர்கள் மீன்பிடி வலைகள் இன்றி கஷ்டப்படுகிறார்கள். இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம், அந்த காலநிலைக்கு ஏற்ற மீன்பிடி வலைகளை விநியோகம் செய்யாத காரணத்தினால் வடபகுதியில் உள்ள கடற்தொழிலாளர்கள் கஷ்டமடைகின்றனரெனக் கூறப்படுகிறது.

'பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை தருக'

மாவிட்டபுரம், புதன் "ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் உத்தியோகஸ்தர்களை வேலைக்குத் தெரிவு செய்யும்போது கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்."

இவ்வாறு கூட்டுறவு அமைச்சரை யாழ். கூட்டுறவுக் கலாசாலை பழைய மாணவர் சமிதி மகஜர் மூலம் கோரியுள்ளது.

கூட்டுறவு ஊழியர் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்து அனுப்பப்பட்ட மகஜரில் தற்போது ஆரம்ப சங்கங்களில் வேலை செய்யும் கூட்டுறவுப் பயிற்சி பெற்ற தற்காலிக ஊழியர்களை உடனே நிரந்தரமாக்க வேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கின்றது.

இம்மகஜரின் பிரதிகள் கூட்டுறவு ஆக்க ஆணையாளர், கோப்பாய், யாழ்ப்பாணம் எம். பி.க்கள், மேலதிக கூட்டுறவு ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

பூட்டோவின் பேச்சுக்கள் பிரச்னையைத் தீர்க்காது

—முஜிபுர்

டாக்கா, மார்ச் 22 பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோவின் அண்மைக்காலப் பேச்சுக்கள் பிரச்னையைத் தீர்ப்பதற்கு எவ்வகையிலும் வழிசெய்யாது என்று வங்காளதேசப் பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஆஸோசியேட்டட் பிரஸ் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியிலேயே முஜிபுர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். மேலும் கூறிய அவர், பாகிஸ்தானுக்கும் வங்காளதேசத்துக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெறவேண்டுமானால் முதலில் பாகிஸ்தான் வங்காள தேசத்தை அங்கீகரிக்க வேண்டும். அப்படி அங்கீகரிக்காவிட்டால் பாகிஸ்தானுடன் எவ்வித பேச்சுவார்த்தைகளும் நடத்தப்போவதில்லை என்று வலியுறுத்தியுள்ளார்.

பனிப் புயலுக்கு 118 பேர் பலி

டோக்கியோ, மார்ச் 22 ஜப்பானில் ஏற்பட்ட கடும் பனிப் புயலுக்கு 118 பேர் பலியானதுடன் பலர் காணாமற் போய்விட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிலுள்ள மலை ஒன்றில் ஏறிக்கொண்டிருந்த மலையேறும் குழுவிலுள்ள 10 பேர் பனி உறைவில் சிக்குண்டு மாண்டுபோயினதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய தலைவர்களான

தப்பெண்ணத்தை நிக்ஸன் போக்குவார்!

வாஷிங்டன், மார்ச் 22 அமெரிக்க அதிபர் நிக்சனின் சீனவிஜயம் உலக அமைதிக்கு மேலும் வாய்ப்பை அளித்துள்ளது என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. ரோஜர்ஸ் கூறியுள்ளார்.

அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அதிபர் நிக்சனின் சீனவிஜயமும் அந்நாட்டுத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளும் சோவியத் யூனியனுக்கு எதிரானவையல்ல. இதுபற்றி சோவியத் தலைவர்களுக்கு திரு நிக்சன் விளக்கிக் கூறவிரும்புகின்றார். அதிபர் நிக்சன் மேமாதத்தில் சோவியத்துக்கு விஜயம் செய்யும்பொழுது இவ்வித தப்பெண்ணத்தை நீக்க முயலுவாரெனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடன் சோவியத் யூனியன் நட்புறவை வளர்க்க விரும்புவதாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு பிரஸ்நேவ் தெரிவித்ததைக் குறிப்பிட்டு உண்மைநிலையை எப்பொழுதும் எவரும் உணர்ந்துகொள்வது நல்லது. மற்றநாடுகளுடன் ஐக்கியத்துடன் ஒத்துழைக்கவேண்டுமென்பதே அமெரிக்காவின் அடிப்படை நோக்கமாகும் என்றார்.

ராஜினாமா

குருநகர், புதன் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. இ. யேசுதாசன் தமது பொது முகாமையாளர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இம்மாதம் முதல் இரண்டாவது முறையாக இச்சங்கத்திற்கு பதவிவகித்து வந்த திரு யேசுதாசன் தனது பதவிக்காலம் முடிவடையு முன்னரே ராஜினாமா செய்துள்ளார். இராஜினாமாக் கடிதத்தை இன்று கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு அவர் அனுப்பிவைத்துள்ளார்.

……

மூவருக்கு சிறைத் தண்டனை

ஊர்காவற்றுறை, புதன் யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியைச் சேர்ந்த ஒருவரின் கடையை உடைத்து, கடைக்காரரையும் அவரது மகனையும் போத்தல்களாலும், பொல்லாலும் தாக்கிக் காயம் விளைவித்ததாக மூவர்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் யாழ் நீதிபதி திரு. கொலின் மெண்டிஸ் மூன்று எதிரிகளுக்கும் தலா ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

பிரிட்டிஷ் அமைச்சர் 'இஸ்ரேல் விஜயம்

டெல்அவிவ், மார்ச் 22 பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் சேர் அலக்ஸ் டக்ளஸ் ஹியூம் இஸ்ரேல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு டெல் அவிவ் வந்து சேர்ந்துள்ளார்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் இரண்டு நாட்கள் இஸ்ரேலில் தங்கியிருப்பார். ஜோர்டான் மன்னர் ஹுசேனின் ஜோர்டான் ஐக்கிய ராஜ்யம் பற்றிய திட்டம் சம்பந்தமாகவும், மேற்காசிய சமாதானம் பற்றியும் திரு. ஹியூம் இஸ்ரேலியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஒருவர் அரசமுறையில் இஸ்ரேலுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

மெய்யர் கருத்து

இஸ்ரேலுக்கு விஜயம் செய்யும் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சருக்கு தாம் சிறந்த முறையில் வரவேற்பளிப்பதாகவும், அவரது வருகையை தாம் மதிப்பதாகவும் இஸ்ரேலியப் பிரதமர் திருமதி கோல்டா மெய்யர் தெரிவித்தார்.

தயான் கருத்து

மன்னர் ஹுசேனின் திட்டப்படி இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்டுள்ள ஜோர்டான் நதியின் மேற்குப் பகுதியை பாலஸ்தீன ராஜ்யமாக அமைக்கவேண்டிய அவசியம் எதுவும் ஏற்படவில்லை என இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் தயான் கூறியுள்ளார்.

பெய்ரூட்டில் ஆர்ப்பாட்டம்

மன்னர் ஹுசேனின் திட்டத்தை எதிர்த்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும் மற்றவர்களும் பெய்ரூட்டில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

'இவர்களுக்கு நிவாரணமளியுங்கள்'

யாழ்ப்பாணம், வியாழன் "வெங்காயக்கடு கொள்வனவு செய்வோர் அதனை நிறுத்திவிட்டதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அரசாங்கம் நேரடியாகவே கடுக்களைக் கொள்வனவுசெய்ய நடவடிக்கை எடுப்பதன் மூலம் கடு உற்பத்தியாளருக்கு நிவாரணம் வழங்குங்கள்".

இவ்வாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசாங்க அதிபர் அண்மையில் நெடுந்தீவுக்கு விஜயம் செய்தபோது அங்கு பனம் பொருள் ஆராய்ச்சி உபநிலையம் அமைப்பது தொடர்பாகக் கழகம் சமர்ப்பித்த மகஜரையிட்டு மேற்படி நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்ததை நினைவூட்டி, அத்தீவின் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைக்கு முக்கிய ஆதாரமாக இருப்பது வெங்காயக் கடுவென்றும், இதனைக் கொள்வனவு செய்வோர் திடீர் நிறுத்தஞ் செய்துள்ளதால் மக்கள் பெரிதும் கஷ்டமுற வேண்டி ஏற்பட்டுள்ளதென்றும் எனவே மக்களுக்கு நிவாரணம் கிடைக்கக் கூடியதான பனம்பொருள் ஆராய்ச்சி உபநிலையத்தை நிறுவுவதன் மூலம் மேலதிக உற்பத்தியைப் பெற்றுக்கொள்ளவும், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் வசதி கிட்டும் என்றும், கடு உற்பத்தியாளர்களின் துயரமும் தீரமுடியும் எனவும் மகஜரில் தெரிவித்துள்ளனர்.

சோவியத் நூல்கள் அன்பளிப்பு

கொழும்பு, புதன் இலங்கையில் உள்ள சோவியத் ஸ்தானிகர் ராபிக் நிஷானேவ் 130 தொகுதிகளைக் கொண்ட நூல்களைக் கல்விஅமைச்சுக்கு அன்பளிப்பாக வழங்கினார். இந்நூல்களில் சோவியத்யூனியனின் விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளிலான நவீன சாதனைகளைக் கொண்ட நூல்களும், விண்வெளிப் பிரயாணத்தைக் குறிக்கும் சோவியத் கலைக்களஞ்சியம் மற்றும் பல்கலைக்கழகத்துக்கான பாட நூல்கள் பௌதிகம், ரசாயனம் தாவரவியல் முதலிய துறைகளிலான நூல்களும் அடங்குகின்றன.

பிக்குகளுக்கு அடையாள அட்டைகள்

கொழும்பு, புதன் உண்மையான பௌத்த பிக்குகளை அடையாளம் தெரிந்துகொள்ளும் வகையில் அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டத்தை கலாச்சார இலாகா மிக விரைவாக ஆரம்பிக்கவிருப்பதாகத் தெரிகின்றது.

பிக்குகளின் உடைகளை அணிந்துகொள்பவர்கள் திருட்டுகள் போன்றவற்றில் ஈடுபடாமலிருக்கும் வகையில் இத்திட்டம் அவசரமாக ஆரம்பிக்கப்படுகின்றது.

—(தவஸ பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டிருக்கின்றது)

★★★★★★★★★★★★★★★

கு □ □ ம்

★★★★★★★★★★★★★★★

வட இலங்கை ஆசிரியர் சங்க போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், புதன்

வடமாகாண ஆசிரியர் சங்கம் நடாத்திய பேச்சு, இசை, கட்டுரைப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடந்த இப்போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:

கட்டுரை

ஆங்கிலம்- ஆண்கள்: எஸ் ஜெயராசா, ஏ ஜே கதிர்காமர் [சென் ஜோன்ஸ் கல்லூரி] எஸ் ஸ்ரீசாந்தா [யாழ் மத்திய கல்லூரி]

பெண்கள்- ரி நாகேஸ்வரி [இராமநாதன் கல்லூரி] பி புஷ்பவதி [காரைநகர் இந்து] ஐ சாரதாதேவி [மகாஜனா]

தமிழ்- ஆண்கள்: எம் அந்தோனிமுத்து [யாழ் மத்தி] வி விநாயகமூர்த்தி [சாவகச்சேரி இந்து] ஏ தங்கராசா [நடேஸ்வரா]

பெண்கள்: பி கமலச்செல்வி [ஸ்கந்தா] எம் ஜோகப்பிள்ளை [இளவாலை கொன்வென்ட்] கே ஹேமாரஞ்சினி [இளவாலை கொன்வென்ட்]

பேச்சு

ஆங்கிலம்- ஆண்கள்: கீழ்ப்பிரிவு: எம் ஏ ஜோசெப் [சென் ஜோன்ஸ்] பி கணேசமூர்த்தி [மகாஜனா] பி சிவகுமார் [ஹாட்லி]

பெண்கள்: ரி வைதேகி [யாழ்ப்பாணக் கல்லூரி] எஸ் சியாமளா [மகாஜனா] ஆர் மலர்விழி [மகாஜனா]

மத்திய பிரிவு- ஆண்கள்: ரி ஆர் ஜெசீலன் [ஹாட்லி] என் ஆர் வேதநாயகம் [சென் ஜோன்ஸ்] எஸ் ஸ்ரீமநாதன் [யாழ் இந்து] ஆர் செல்வகாந்தன் [மகாஜனா]

பெண்கள்: எஸ் இந்திரா [மானிப்பாய் மகளிர் இந்து] பி மேகலா [மகாஜனா] கௌரிசித்திரவேல் [இராமநாதன் கல்லூரி]

மேற்பிரிவு ஆண்கள்: எஸ் சிவராசன் [மகாஜனா] ஆர் கீர்த்திசிங்கம் [யாழ் மத்தி] எஸ் ஸ்ரீஸ்கந்தா [யாழ் மத்தி]

பெண்கள்: ஆர் சோமளி [உடுப்பிட்டி அ மெ மி கல்லூரி] ஆர் சாந்தகுமாரி [யாழ்ப்பாணக் கல்லூரி] எஸ் ஜஸ்மின் [இளவாலை கொன்வென்ட்]

அதி மேற்பிரிவு- ஆண்கள்: வி மயூரேசன் [யாழ் கல்லூரி] எஸ் தயாபரன் [மகாஜனா] டி புவனேந்திரன் [மானிப்பாய் இந்து]

பெண்கள்: எஸ் மிராளினி, கே சிவகாமி [மகாஜனா]

தமிழ் பேச்சு

கீழ்ப்பிரிவு- ஆண்கள்: என் முரளீதரன் [நடேஸ்வரா] கே கௌரிகாந்தன் [சிதம்பரா கல்லூரி] எஸ் நந்திகேசன் [சென் ஜோன்ஸ்]

பெண்கள்: பி நிரஞ்சினி [விக்டோரியா] என் கௌரி [மகாஜனா] எஸ் இந்துமதி [டிறிபேக]

மத்திய பிரிவு- ஆண்கள்: எஸ் தனபாலசுந்தரம் [மகாஜனா] ஆர் நரேந்திரன் [ஹாட்லி] என் விக்னேஸ்வரன் [யாழ் இந்து]

பெண்கள்: பி மேகலை [மகாஜனா] கே சுசீலா [மானிப்பாய் இந்து] எஸ் வசந்தநாயகி [பண்டத்தரிப்பு இந்து மகளிர்]

மேற்பிரிவு- ஆண்கள்: வி கோகிலரூபன் [மானிப்பாய் இந்து] எஸ் தயாபரன் [மகாஜனா] கே சிவப்பிரகாசம் [உசன் இராமநாதன் ம வி]

பெண்கள்: நித்தியவதனி ஜெயசிங்கம் [இராமநாதன் கல்லூரி] எஸ் ஜெயவதனா (மகாஜனா) எஸ் சகுந்தலை [யாழ் கல்லூரி]

அதிமேற்பிரிவு- ஆண்கள்: ஏ ஸ்ரீதரன் [ஹாட்லி] எம் ராஜேஸ்வரன் [நடேஸ்வரா] வி திவ்வியராசா [சாவகச்சேரி இந்து]

பெண்கள்- கே செல்வராணி [சாவகச்சேரி இந்து] எம் மிராவினி (மகாஜனா) வி மகேஸ்வரி (வட இந்து மகளிர்)

தனித்துப்பாடல்

கீழ்ப்பிரிவு- ஆண்கள்: எஸ் அருள்மணிநாதன் (மகாஜனா) தி விக்கினேஸ்வரன் (அருணோதயா) வி ஜம்புநாதன் [மகாஜனா]

பெண்கள்: ம கலைவாணி [மகாஜனா] அ அம்சவல்லி [இராமநாதன் கல்லூரி] ஜெ ராதா [மெதடிஸ்த பெ. கல்லூரி]

மேற்பிரிவு- ஆண்கள்: எஸ் சிவஞானராசா (மகாஜனா) வி கிருஷ்ணபிள்ளை [திரு இருதயக் கல்லூரி] எஸ் தில்லைமணி [வட. இந்து மகளிர்]

பெண்கள்: பி விமலாதேவி [அருணோதயா] கே சாந்தி [இராமநாதன் கல்லூரி] வி திருமகள் [அருணோதயா]

கூட்டுப் பாடல்

மேற்பிரிவு- ஆண்கள்: அருணோதயா, புலோலி ஆண்கள் ஆங்கிலக் கல்லூரி, வரணி மகாவித்தியாலயம். பெண்கள்: இராமநாதன் கல்லூரி, வட-இந்து பெண்கள் கல்லூரி, அருணோதயா.

கீழ்ப்பிரிவு- ஆண்கள்: மகாஜனா, ஸ்கந்தவரோதயா, யாழ்ப்பாணக் கல்லூரி. பெண்கள்: மகாஜனா, மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி, அருணோதயா.

கிரிக்கெட் முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா

கடந்த வாரம் யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற மூன்று கிரிக்கெட் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

மத்திய கல்லூரி வெற்றி

யாழ் மத்திய கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் யாழ் மத்திய கல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இப்போட்டி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ். இந்து வெற்றி

யாழ். இந்துக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் யாழ் இந்து 6 மேலதிக ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்து முதல் இன்னிங்ஸில் 167 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 100 ஓட்டங்களையும் பெற்றது. மகாஜனாக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 94 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 167 ஓட்டங்களையும், பெற்றது.

இப்போட்டி மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது

சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென். ஜோன்ஸ் 35 மேலதிக ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டி வட்டுக்கோட்டையில் நடைபெற்றது.

[தே நி]

விவசாயசேவை நிலையங்கள் திறக்கப்படும்

கொழும்பு புதன்

நாடெங்கிலுமுள்ள கிராம சபைப் பகுதிகளில் விவசாய சேவை நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. இந்நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்னைகளைத் தீர்க்கவும் விவசாயம் சம்பந்தமான உதவிகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

கமத்தொழில் சேவை இலாகா இந்த நிலையங்களைத் திறக்கவிருக்கிறது. இந்நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு கமத்தொழில் திணைக்கள அதிகாரிகளும், கமத்தொழில் சேவை இலாகா அதிகாரிகளும் விவசாய அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக அறிவுரை வழங்கவுள்ளார்கள். இதனால் விவசாய அபிவிருத்தி வேலைகள் துரித கெதியில் நடைபெற வழிபிறக்கும். விவசாயம் சம்பந்தமான செய்திகளும் இந்நிலையங்கள் மூலம் கிடைக்கக்கூடியதாக இருக்கும். (ச)

காசுக்கட்டளை யாருடையது?

கன்னாதிட்டியைச் சேர்ந்த மோசஸ் ரூபேட் என்பவர் கனகரத்தினத்துக்குரிய காசுக் கட்டளையொன்றைக் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

36-வது மகாஜன சம்பத சீட்டிழுப்பு

மார்ச் 30-ந் திகதி மாலை 5-15 க்கு கல்முனை சாஹிரா கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

சிங்கள—தமிழ் புத்தாண்டு பண்டிகைக்கு விசேட பரிசுகள் பெறும் வாய்ப்பு

இந்தியன் மணிப்புரி சாறி - இறக்குமதியான கம்பளி நீளக்காற்சட்டைத் துணிகள் - இறக்குமதியான கைக்கடிகாரங்கள் - இறக்குமதியான பப்ளின் - இறக்குமதியான ரெற்றோன் சேட்துணிகள் - இறக்குமதியான பற்றிக்குகள் - இறக்குமதியான பிஜாமா பற்றிக்குகள் - இறக்குமதியான வெள்ளை, நிற சாரங்கள் - உள்ளூரில் அச்சடியான இறக்குமதிசெய்த நைலெக்ஸ், டெக்ரோன் சேலைகள் சிங்கள, தமிழ் - புத்தாண்டு விசேட பரிசுகளாக!

1ம், 2ம், 3ம் ரொக்கப்பரிசு பெறும் டிக்கெட்டுகளுக்கு:

1. தலா ரூபா 200/-க்கு 2 இந்தியன் மணிப்புரி சேலைகள் அல்லது ரூபா 90/-க்கு 1 1/2 யார் இறக்குமதிசெய்த கம்பளி நீளக்காற்சட்டைத் துணி.
2 ரூபா 300/-க்கு [illegible], இறக்குமதிசெய்த கைக்கடிகாரம்.
3. ரூபா 9/25 க்கு 2 1/2 யார் இறக்குமதி செய்த பப்ளின்.
4. ரூபா 18/75 க்கு 2 1/2 யார் இறக்குமதிசெய்த ரெற்றோன் சேட்துணி.
5. ரூபா 12/ க்கு 3 யார் பற்றிக்.
6 ரூபா 20/-க்கு இறக்குமதிசெய்த வெள்ளைச் சாரம் அல்லது ரூபா 18/-க்கு இறக்குமதிசெய்த நிறசாரம் அல்லது ரூபா 15/-க்கு 3 யார் பிஜாமா பற்றிக்
7. ரூபா 49/50 க்கு உள்ளூரில் அச்சடியான இறக்குமதி செய்த நைலெக்ஸ் அல்லது டெக்ரோன்சேலை

200 ஆறுதல் பரிசாக ரொக்கப்பரிசுபெறும் டிக்கட்டுகளுக்கு:

1. ரூபா 300/-க்கு [illegible], இறக்குமதியான கைக்கடிகாரம்.
2. ரூபா 9/25 க்கு 2 1/2 யார் இறக்குமதியான பப்ளின்.
3. ரூபா 18/75 க்கு 2 1/2 யார் இறக்குமதியான ரெற்றோன் சேட்துணி.
4 ரூபா 12/-க்கு 3 யார் இறக்குமதியான பற்றிக்.
5 ரூபா 20/-க்கு இறக்குமதிசெய்த வெள்ளைச் சாரம் அல்லது ரூபா 18/-க்கு நிற சாரம் அல்லது ரூபா 15/-க்கு இறக்குமதியான பிஜாமா பற்றிக்.
6. ரூபா 49/50க்கு உள்ளூரில் அச்சடியான இறக்குமதிசெய்த நைலெக்ஸ் அல்லது டெக்ரோன் சேலை ஒன்று.

ரொக்கப் பரிசுபெறும் டிக்கெட்டுகள் உள்ளடங்கிய (ரொக்கப்பரிசுபெறும் டிக்கெட்டுகள் தவிர்ந்த) எல்லா 100 டிக்கெட்டுகளுக்கும்:

1. ரூபா 20/ க்கு இறக்குமதியான வெள்ளைச் சாரம் அல்லது ரூபா 18/-க்கு இறக்குமதியான நிற சாரம் அல்லது ரூபா15/-க்கு 3 யார் பிஜாமாபற்றிக்
2. ரூபா 49/50க்கு உள்ளூரில் அச்சடியான இறக்குமதிசெய்த நைலெக்ஸ் அல்லது டெக்ரோன்சேலை

ரொக்கப்பரிசுபெறும் டிக்கெட்டுகளைச் சார்ந்த 100 இலக்கங்களுக்கு முன்பாக வரும் 200 டிக்கெட்டுகளுக்கும் அடுத்து வரும் 200 டிக்கெட்டுகளுக்கும் (ரொக்கப்பரிசு பெறும் டிக்கெட்டுகள், ரொக்கப்பரிசு பெறும் டிக்கெட்டுகளைச் சார்ந்த 100 டிக்கெட்டுகள் தவிர) 1. ரூபா 49/50 க்கு உள்ளூரில் அச்சடியான இறக்குமதி செய்த நைலெக்ஸ் அல்லது டெக்ரோன்சேலை.

(உதாரணமாக, ரொக்கப் பரிசுபெறும் டிக்கெட் 22 K 000545 ஆக இருந்தால் 22 K 000501-000600 வரையுள்ள 100 தொடரிலக்கங்களுக்கும் விசேட பரிசுகளுண்டு. மேலும் 22 K 000301—000500 வரையுள்ள எல்லா டிக்கெட்டுகளுக்கும் 22 K 000601—000800 வரையுள்ள எல்லா டிக்கெட்டுகளுக்கும் ரூபா 49/50க்கு உள்ளூரில் அச்சடியான இறக்குமதிசெய்யப்பட்ட நைலெக்ஸ் அல்லது டெக்ரோன் சேலை வழங்கப்படும்.)

இந்த விசேட பரிசுகள் யாவும் முதலில் வருபவருக்கு முதலில் வழங்கல் என்னும் அடிப்படையில் கையிருப்பு முடியும்வரை 72/04/04 முதல் 72/04/17 (இரு தினங்களும் உட்பட) 72/04/12, 72/04/13 தினங்கள் தவிர, காலை 9 மணி முதல் பி. ப. 3 மணி வரை தினசரி அடையாளச் சின்னங்கள் கொடுப்பதன் மூலம் வழங்கப்படும் ஒருநபர் ஒருதடவையில் ஒரு டிக்கெட்டையே கையளிக்கமுடியும்.

"இன்றே ஒரு மகாஜன சம்பத டிக்கெட்டை வாங்கி
விசேட பரிசுக்கும் உரியவராகுங்கள்!"

பரிசு பெறுபவர்கள் விசேட பரிசாகப் பெறும் பொருட்களை அவை பெறும் இடத்தில் வைத்தே பரிசீலித்துக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஏதாவது சேதம் அல்லது பழுது இருப்பின் அவற்றை உடனே திருப்பிக் கொடுத்துவிடவும். பெறப்படும் இடத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட பொருட்கள் பின்னர் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பெறும் இடத்திலிருந்து எடுத்துச் சென்றபின் அதில் உள்ள சேதம், பழுதுகளுக்குச் சபை பொறுப்பல்ல.

இவ் விசேட பரிசுகளை வாங்குவதற்குத் தேசிய லொத்தர் சபை அந்நியச் செலாவணி எதையும் பயன்படுத்தவில்லை.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசீய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

இலங்கை சஞ்சிகையாளர் ஒன்றியம்

சஞ்சிகையாளர் பிரச்சினைபற்றி கருத்தரங்குகள் நடத்தும்

கொழும்பு, புதன் ஈழத்துச் சஞ்சிகையாளர் முன்னுள்ள பிரதான பிரச்சினைகளை பற்றி நான்கு கருத்தரங்குகளை நடாத்த இலங்கைச் சஞ்சிகையாளர் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

சஞ்சிகையாளரின் விநியோகப் பிரச்சினைகள் பற்றிய முதலாவது கருத்தரங்கு மே மாதம் நடுப் பகுதியில் கொழும்பில் நடைபெறும்.

சஞ்சிகைகளின் தயாரிப்பு, அடக்கம் ஆகியவை பற்றியும் சஞ்சிகையாளனும் வாசகனும் என்ற விஷயம் குறித்தும் ஒன்றியம் கருத்தரங்குகளை நடத்தவிருக்கின்றது.

பிரசுர முயற்சிகளை மேற்கொள்ளவும், உள்ளூர்த் தமிழ்ச் சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் அடித்தளத்தை உருவாக்குவதையில் கண்டத்துத் தமிழ் சஞ்சிகைகளினதும் விநியோகத்தைக் கைப்பற்றவும், கடதாசி, மை, அச்சு வசதிகள் ஆகியவற்றை சஞ்சிகையாளர்களுக்கு நியாய விலையில் பெற்றுத்தரவும், சஞ்சிகையாளர்களின் கூட்டுறவு நிறுவனம் ஒன்றை அமைப்பது ஒன்றியத்தின் செயற்குழு சமர்ப்பித்த ஆலோசனை ஒன்றியப் பொதுச்சபைக் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கூட்டம் கடந்த வார இறுதியில் கொழும்பில் சஞ்சிகையாளர் ஒன்றியத்தின் தலைவர் திரு. வரதர் தலைமையில் நடைபெற்றது. ஒன்றியத்தின் அமைப்பு விதிகளைச் சில திருத்தங்களுடன் பொதுச்சபைக் கூட்டம் அங்கீகரித்தது.

ஒன்றியச் செயற்குழுவின் புதிய உறுப்பினர்களாக 'சிரித்திரன்' ஆசிரியர் திரு. சிவஞானசுந்தரம், 'கதம்பம்' ஆசிரியர் திரு. கே. வி. எஸ். மோகன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

சஞ்சிகையாளர் கூட்டுறவு அமைப்பை நிறுவுவதற்கு ஒன்றியத்தின் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டுமென்று வலியுறுத்திய பொதுச்சபைக் கூட்டம் இதற்கென 'அஞ்சலி' ஆசிரியர் செல்வராசா, என். சோமகாந்தன், பத்மநாதன், எம். ஏ. ரஹ்மான் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றையும் தேர்ந்தெடுத்தது.

கிராமங்கள் தோறும்

பொதுமக்கள் பாதுகாப்பு இயக்கம்

கொழும்பு, புதன் விவசாயிகளின் பயிர்களையும் வீடுகளிலுள்ள பெறுமதியான சாமான்களையும் கொள்ளையடித்துச் செல்லும் நபர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவும் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்களுக்கு எதிராகவும் பொதுஜன பாதுகாப்பு இயக்கங்கள் கிராமங்கள், நகரங்கள் தோறும் ஆரம்பிக்கப்பட்டுவருகின்றன.

ஆட்சிமன்ற பிரதிநிதிகள், பொலிஸ் அதிகாரிகள், அரசாங்க அதிபர்கள் ஆகியவர்கள் ஒன்று சேர்ந்து பொதுமக்களின் ஆதரவோடு இந்த இயக்கங்களை ஆரம்பித்து வருகிறார்கள்.

ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கு பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்க விடுத்த ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து இந்த ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தெரிகின்றது.

நாட்டில் நடைபெற்று வரும் திருட்டுகளைப் பிடிப்பதற்கும் ராஜதுரோக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்களைக் கண்டுபிடிக்கவும் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சமீபத்தில் பிரதம மந்திரி தெரிவித்திருந்தார்.

அயல் வீட்டுக் கோழிகளை

நஞ்சுவைத்துக் கொன்றாராம்

பெண்மீது வழக்கு

முல்லைத்தீவு, புதன் அயல் வீட்டுக் கோழிகளுக்கு நச்சுத்திராவகம் வைத்துக் கொன்றதாக ஒரு பெண்மீது முல்லைத்தீவுப் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தண்ணீரூற்று எனுமிடத்தை வாசியான வீரவாகு கைம்பெண் மாணிக்கம் என்பவர் தனது அயல் வீட்டுக்காரருடைய கோழிகளுக்கு நச்சுத் திராவகம் வைத்துக் கொன்றதாக முல்லைத்தீவுப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றவாளியெனக் கூறியதால் நீதிபதி எதிரியை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மேல் விசாரணையை அடுத்த மாதம் 17ந் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

சட்டக்கல்லூரி விவாதக்குழு தேர்வுப்போட்டி

கோட்டை, புதன் இலங்கைச் சட்டக்கல்லூரி தமிழ் விவாதக்குழுத் தேர்வுப்போட்டி கல்லூரித் தமிழ் மன்றத் தலைவர் திரு. வி. சச்சிதானந்தம் தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

தேர்வின்போது விவாதக் குழுத் தலைவராக என். ஸ்ரீகாந்தாவும், உபதலைவராக ஜி. வி. ஞானனும் குழு உறுப்பினர்களாக எஸ். கே. மனோகரன், பெ. சுந்தரலிங்கம், சகுந்தலா சிவசுப்பிரமணியம், எஸ். கே. மகேந்திரன் ஆகியோரும் தெரிவாகினர்.

மத்தியஸ்தர்களாக முடிக்குரிய வழக்கறிஞர் கே. சிவராசா, வழக்குரைஞர் ஜீ. ஜீ. தம்பையா, பரிஸ்டர் பி. கனகேஸ்வரன் ஆகியோர் கடமையாற்றினர். போட்டிக்கான ஏற்பாடுகளை மன்றப் பொதுச் செயலாளர் திரு. வி. இராஜேந்திரா செய்திருந்தார்.

83 வயதைக் கொண்டாடுகிறார்

யாழ்ப்பாணம், விய. முன் சைவம் தமிழ் மொழி சமூக முன்னேற்றம் ஆகிய முற்போக்கான பணிகளில் அயராதுழைத்துவரும் அறநெறிக் காவலர் முதலியார் செ. முத்துத்தம்பி இன்று தமது 83 வது வயதைக் கொண்டாடுகிறார்.

திரு முதலியார் முத்துத்தம்பி அண்மைக்காலத்தில் முதிர்ச்சியான வயதிலும் சமூக சேவைகளில் உழைத்து வருவது குறிப்பிடத்தக்கது. உற்சாகம் குன்றாத பேச்சும்-சமுதாய நோக்கும் எவரையும் கவரும் பெற்றிமை பெற்றுள்ளது. ஆறுமுக நாவலர், ஞானப்பிரகாச முனிவர், சேர் பொன் இராமநாதன் ஆகிய பெரியார்களின் வழியிலே இன்றைய சமுதாய இளைஞர்கள் செல்லவேண்டுமென்று அயராது உரைத்துவரும் இப்பெரியார் ஓய்வு நேரத்தைப் பெரும்பாலும் ஆன்மீக நூல்களைப் படிப்பதிலே செலவிட்டுவருகிறார்.

இன்றைய நிகழ்ச்சிகள்

குருநகர், விய. யாழ். இளங்கலைஞர் மன்றத்தில் நான்காவது நாள் இசைவிழா நிகழ்ச்சிகள். இன்றைய நிகழ்ச்சிகளுக்கு ஜகத்குரு ஸ்ரீமத் சிவானந்தமுனி சிரேஷ்ட ஞானசாமிய சுவாமிகள் தலைமை தாங்குகின்றார்.

மாலை 5-00 - 5-45 திரு. ஜெயசீலன் - பாட்டு.

5-45 - 6 30 செல்வி நாகேஸ்வரி வல்லிபுரம் - பாட்டு.

6 30 - 7 15 செல்வன் வி. சிவஞானசேகரம் - பாட்டு

7-15 - 7-30 தாளவாத்தியக் கச்சேரி - நந்தி இசை மன்றம்

7-30 - 7-45 தலைமையுரை - ஜகத்குரு ஸ்ரீமத் சிவானந்தமுனி சிரேஷ்ட ஞானசிய சுவாமிகள் (தெல்லி ஸ்ரீ ராசராசேஸ்வரி பீடத்தின் 37-வது சிம்மாசனாதிபதி)

7-45 8-30 செல்வி நவமணி நாகலிங்கம் - பாட்டு.

8-30 - 10-00 சிறப்பு நிகழ்ச்சி திரு. ராம் குமாரசாமி - பாட்டு.

பிழையான தகவல் கொடுத்தார்

முல்லைத்தீவு, புதன் முல்லைத்தீவு சின்னூற்றுக் காட்டில் வசிக்கும் பொற்கண்ணு குமாரு என்பவர் தனது கடைசிப் பிள்ளையின் பிறப்பை முல்லைத்தீவுப் பிறப்புப் பதிவுகாரரிடம் பதியும்போது தான் ஓர் இந்தியத் தமிழராக இருந்தும் அதை மறைத்து இலங்கைத் தமிழரெனக் கூறிப் பதிவு செய்ததாகக் குற்றஞ்சாட்டி வவுனியா விசேட குற்றத் தடுப்புப் பொலிஸ் பகுதியினரால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசுவாமி முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின் பின் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி எதிரிக்கு 100 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். வவுனியா விசேட குற்றத் தடுப்புப் பொலிஸ் சார்ஜன்ட் திரு எஸ் சண்முகராசா வழக்கை நடத்தினார்.

கூடிய கட்டணத்துக்கு வசதியான பஸ்கள்

கொழும்பு புதன் வசதியுள்ள பிரயாணிகளுக்காக விசேஷ பஸ்களை கொழும்பு வீதிகளில் கூடிய கட்டணத்திற்கு சேவையில் ஈடுபடுத்த இ. போ. ச. ஆலோசித்து வருகின்றது.

தற்பொழுது பிரயாண வசதியீனம், நெருக்கடி போன்ற காரணங்களுக்காக இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணம் செய்யாத பொதுமக்கள் இப்புதிய சேவையால் பயன்பெறுவர். மேலும் தற்பொழுது பாதைகளில் நிலவிவரும் போக்குவரத்து நெருக்கடிகளும் ஓரளவு குறையும் என்றும் நம்பப்படுகின்றது.

டாக்ஸிகளிலும் கார்களிலும் செல்பவர்களுக்கு இப் பஸ்சேவை பெரிதும் நன்மை பயக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. [ச]

கதிர்காம புனித நகர் விஸ்தரிப்பு

கொழும்பு புதன் கதிர்காமத்தில் மாணிக்க கங்கையின் ஒரு பக்கத்திலுள்ள சகல விற்பனை நிலையக் கட்டிடங்களும் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படும்.

கதிர்காம புனித நகரின் விரிவுக்காக இக்கட்டிடங்கள் எடுக்கப்படுகின்றன. அந்தக் கட்டிடங்களைக் கையேற்பதற்கான அறிவித்தல்கள் ஏற்கனவே விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கும், மடங்களின் உரிமையாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டிடங்களை இப்பகுதி அரசாங்க அதிபர் இம்மாத இறுதியில் பொறுப்பேற்றுக் கொள்வார். கையேற்கப்படும் நிலைய உரிமையாளர்களுக்கு மாற்று இடவசதிகள் செய்து கொடுக்கப்படுமெனத் தெரியவருகிறது.

கதிர்காம மகாதேவாலயத்தை அடுத்து இருக்கும் இராமகிருஷ்ண மடத்தை அரசாங்கம் இப்போதைக்கு எடுக்காதென நகர திட்டமிடல் பகுதி இயக்குநர் திரு. நெவில் குணரத்தின தெரிவித்தார். யாத்திரீகர்களுக்கு மடங்கள், கதிர்காமம் வரும் ஏராளமான யாத்திரீகர்களுக்கு வருடம் முழுவதும் பயன்பட்டுவருகின்றன. ஆதலால் இப்போதைக்கு அவை எடுத்துக் கொள்ளப் படாதென்றார்.

இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 13-ந் திருவிழாவான இன்றுமாலை 7-30 மணிவரை திருப்புகழ் குடி அன்புக்கடல் திரு. வி. க. ஆறுமுகம் ஆசிரியரின் கந்தரலங்காரம் என்ற தொடரும் 8-30 - 9-30 வரை திரு ம. நடேசன் அவர்களின் இன்னிசையும் சுவாமி அலங்காரத்தில் வீதிவலம் வருதலும் இடம் பெறும்.

……

மண்வெட்டி ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. என். சண்முகநாதன் புரக்டர் ஈ. பாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் கே. ஜெயராஜதேவன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் பெரேரா ஆஜரானார்.

செல்லையா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: "சம்பவம் நடந்த தினம் எனக்கு ஞாபகமிருக்கிறது. இறந்தவர் எனது மகன். அன்று பிற்பகல் நான் வீட்டிலிருந்தேன். காணியில் கலவரம் நடப்பதாக அறிந்தேன். நான் போனபோது எதிரி என் மகனை மண்வெட்டியால் வெட்டியபின் என் தலையிலும் வெட்டினார். எனக்குக் காயமேற்பட்டது. நான் ஒரு கம்பு எடுத்து எதிரிக்கு அடித்தபோது இரு பெண்கள் ஓடிவந்து என்னைத் தாக்கினார்கள். நான் தடியைப் போட்டுவிட்டேன். மகனை வெட்டியபின் அவர் எழும்பமுடியாமல் மயக்கம் அடைந்து கிடந்தார். அப்பொழுது பலர் கூடிநின்றார்கள்.

எதிரியுடன் நான் கதைப்பதில்லை. காணித்தகராறினால் கதைப்பதில்லை. எனது மற்றச் சகோதரன் மாணிக்கத்துடனும் நல்லாய்க் கதைப்பதில்லை. என் தகப்பனார் காணியை என் மகனுக்கு எழுதமுற்பட்டார். இதனால் பிரச்சினை ஏற்பட்டது.

ஆண்டி பெருமாள் சாட்சியமளிக்கும்போது கூறியதாவது: சம்பவம் நடந்தபோது நான் சாப்பிட வந்தேன். கந்தையா, மாணிக்கம், பாக்கியம் ஆகியோர் அருந்திவிட்டுத் திரும்ப பின் நின்றார்கள். கந்தையா மண்வெட்டி வைத்திருந்தார். மற்றவர்கள் கம்புகள் வைத்திருந்தார்கள். அம்பலவாணரையும் செல்லத்துரையும் கொட்டிலில் இருந்தார்கள். மாணிக்கம் செல்லத்துரைக்கு கம்பால் அடித்தார். கந்தையா மண்வெட்டியால் கொத்தினார். அதன் பின் செல்லையா ஓடிவந்தார்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

பிரயாணிகளின் தாராளம்

குருநகர், புதன் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸில் பிரயாணம் செய்த வாலிபர் ஒருவர் பிரயாணப் பற்றுச்சீட்டைத் தொலைத்ததினால் பெரும் சங்கடத்திற்குள்ளானார்.

நேற்று முன்தினம் மன்னார் - யாழ்ப்பாணம் பஸ்ஸில் திடீரென ஏறிய டிக்கட் பரிசோதகர் குறித்த பிரயாணியிடம் டிக்கட் பணத்துடன் 4 ரூபா 80 சதம் மேலதிகமாகக் கட்டவேண்டுமெனக் கூறவே வேறு பணமில்லாததால் அவர் பெரும் கஷ்டமடைந்தார். ஆனால் அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த மற்றப்பிரயாணிகள் பணம் சேர்த்து உதவி அந்த வாலிபரின் கஷ்டத்தைப் போக்கினர்.

அறிக்கை

கொழும்பு, புதன் இலங்கையின் கடற்றொழில் சம்பந்தமாக ஆராய்ந்த சீன நிபுணர்குழு தனது அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்கும். கடற்றொழில் சம்பந்தமான மதிப்பீடுகள் இந்த அறிக்கையில் அடங்கும்.

கைப்பை யாருடையது?

யாழ்ப்பாணம், விய. யாழ்ப்பாணம் நகர ரோட்டில் பெண்கள் கைப்பை ஒன்று திறப்புடனும் ரொக்கப்பணத்துடனும் யாழ் புகையிரத கட்டடப் பகுதியில் கடமையாற்றும் ஊழியர் திரு முத்துக்குமாரு என்பவரால் நேற்று மாலை கண்டெடுக்கப்பட்டு புகையிரத சேவைச் சங்கக் காரியதரிசி திரு வி. தளையசிங்கத்தினால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

மணிவாக்கு

நமது மனம் பரிசுத்தமானால், நமது விரோதியும் நமது நண்பராகிவிடுவார். இது உறுதி. மாசுபட்ட உள்ளமே, நம்மைப் பிறர்மீது அன்பில்லாமல் செய்கிறது. பிறரும் அதே போன்ற உணர்ச்சியைப் பிரதிபலிக்கிறார்கள். நாம் அன்பு கொடுத்தால் அன்பைப் பெறுவோம்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Ceylon's National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box 69 Jaffna Telephone: 389

[illegible] [illegible] வருஷம் பங்குனி மாதம்
10ந் திகதி (23-3-78)

ஒருநல்ல நாள்

இன்று ஸ்ரீ ராம நவமி. அறவாழ்க்கை வாழ்ந்து காட்டிய சக்கரவர்த்தித் திருமகன் ஸ்ரீ ராமன் அவதரித்த நல்ல நாள் இன்று. அவர் குறிப்பிட்ட சமயத்தவர்க்கோ நாட்டுக்கோ மட்டும் உரியவரன்று. மக்களினம் அனைத்துக்கும் உலகத்துக்கும் இராமாயணம் ஒரு பொதுவுடைமை.

சில மாதங்களுக்கு முன்னர் இஸ்லாமிய நாடான இந்தோனேஷிய அரசாங்கம் இராமாயண விழாவைப் பெரிய அளவில் நடத்தியதும், அதில் மலேஷியா உள்ளிட்ட பல நாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது. அது ஒரு பழைய கதையென்றும், இக்காலத்தில் புதிதாக எவ்வளவோ கதைகள் வந்துவிட்டதாகவும் சிலர் கூறலாம். ஆனாலும் இராமாயணத்தை எவ்வளவுதடவை கேட்டாலும் படித்தாலும் அது சலிப்பதில்லை.

ஏன்? அது நமக்கு ஆறுதல் அளிக்கவும் வாழ்க்கையில் நாம் எவ்விதம் நடக்க வேண்டுமென்று நல்வழிகாட்டவும் உதவுகின்றது. ராமனும் சீதையும் வாலிபர்கள். ராஜ குடும்பத்தினர் என்றாலும் அவர்கள் பட்ட கஷ்டங்கள் எவ்வளவு! மறுநாள் மகுடாபிஷேகம் என்று சொல்லிவிட்டு, அதை மாற்றி காட்டுக்குப் போகவேண்டுமென்று ஒரு தந்தை உத்தரவிட்டால் இக்காலத்தில் என்ன நடக்கும்? முடி இழந்த கணவனுடன் யுவதியான இளவரசி வனவாசம் செய்வாளா?

தந்தைசொல்மிக்க மந்திரமில்லை, தாய் சொல்லைத் தட்டாதவன் வாசகமில்லை என்றவர்களுக்கு ஓர் இலக்கியமாக அவர்கள் நடந்து காட்டினர். வனத்திலும் பிறகும் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள்தான் எவ்வளவு! எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு தங்கள் கடமையைச் செய்து அறவாழ்வு வாழ்ந்து முடிவில் வெற்றியீட்டினர். தன் மனைவியைத் தூக்கிச் சென்றவனிடமும் கருணை காட்டினார். 'இன்றுபோய் நாளைவா' என்றார். எல்லாக் குற்றங்களையும் மன்னிக்கவும் தயாராக இருந்தார் ராமர்.

நம்மைவிட அதிகம் கஷ்டப்படுபவர்களைப் பார்த்தால் நமக்கு ஒருவித ஆறுதல். இரண்டு கண்களுமில்லாதவரைப் பார்த்தால் ஒற்றைக் கண்ணனுக்குத் தன்குறை மறந்து விடும். அதுபோல ராமனும் சீதையும் பட்ட கஷ்டங்களைப் படிக்கும் போதும் கேட்கும் போதும் நமது கஷ்டங்கள் எல்லாம் அற்பமாகத் தோன்றும். அவற்றை சகித்துக் கொள்ளக் கூடிய மனப்பக்குவம் ஏற்படும். அதனால்தான் இராமாயணம் பல நூற்றாண்டுகளாக கோடிக்கணக்கான மக்களின் மனங்களை ஈர்த்து வருகின்றது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துநின்று போராடி நாட்டுக்கு அரசியல் விடுதலை வாங்கித் தந்த மகாத்மா காந்தி, கடைசி மூச்சிலும் 'ஹேராம்' என்றார். அவர் உள்ளத்தை பரிசுத்தமாக்கி, வழிகாட்டியது அதே மந்திரம்தான். 'ஈசுவரன், அல்லா எல்லாம் உனது பெயர்களே. எங்களுக்கு நல்ல புத்தியைக் கொடு' என்று தாம் பிரார்த்தனை செய்ததுடன் எல்லாரையும் கூட்டுப் பிரார்த்தனை செய்யச் செய்தார். சமய சமரச நல்லறிவு வந்துவிட்டால் சமய வேற்றுமை இருக்குமா? நம்மிடையே இருக்கும் பகைமைகளும், பிரார்த்தனை மூலம் நீங்கிவிட்டால் நம் இன்னல்களும் தீர்ந்துவிடுமல்லவா?

'உண்ணாமல் பலநாட்கள் உயிர் வாழ்வேன். ஆனால் பிரார்த்தனை இல்லாமல் அரைக்கணமும் என்னால் வாழமுடியாது' என்றார் மகாத்மா. நற்குணங்களெல்லாம் திரண்ட ஒரு குணக்குன்று, தார்மீக வாழ்க்கை வாழ்ந்து காட்டிய ஒருவரை, தம் தெய்வமாகக்கருதி அவரை நம்பி வாழ்ந்தார் மகாத்மா! எல்லாக் கஷ்டங்களையும் வென்றார் தம் பேரன்பினால். நமது எதிர்காலத்தைப் பற்றி இன்று எவ்வளவோ நினைப்புகளும், பயங்களும் ஏற்படுகின்றன. எந்த வழி செல்வதென்று புரியவில்லை. நம்மனதிலே கலக்கமின்றி, அன்புடனே தெய்வநம்பிக்கையுடனே நமது கடமைகளைச் சரிவரச் செய்தால் மேலான இலட்சியத்தை அடையலாமென்று காட்டுவதே சீதா—ராமன் சரித்திரம். இது இன்றும் என்றும் நமக்கு மட்டுமன்றி மனிதகுலம் முழுவதுக்கும் பயன்படக்கூடியதாயுள்ளது.

'பிறந்த மண்மீதும் மொழிமீதும் எனக்கும் பற்று உண்டு'

—கிளிநொச்சி எம். பி.

கிளிநொச்சி, புதன்

'தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் நான் ஒரு குறிப்பிட்ட விடயம் பற்றி மௌனம் சாதிப்பதாகக் கூறப்படுகிறது. அதுபற்றி என் கருத்தைப் பொதுமக்களுக்குக் கூறுவது என் கடமை என்பதால் இவ்விடயத்தில் கூறி வைக்கிறேன். நான் ஒரு தமிழ் மகன். எனக்கும் பிறந்த மண்மீதும் மொழிமீதும் மற்றோருக்கிருக்கும் மதிப்புண்டென்பதைக் கூற விரும்புகின்றேன்'

இவ்வாறு கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. ஆனந்தசங்கரி கரடிப்போக்குச் சந்தியில் உபதபால்நிலையம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

மிகக்குறுகிய காலத்தில் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாடு நீங்குமெனவும் மேலும் சில உபதபால் நிலையங்கள் திறக்க ஆவன செய்யப்படுமெனவும் கூறினார். மேலும் பேசுகையில் எமக்கிருக்கும் ஒரு சில கருமங்களைச் செய்ய வேண்டியிருப்பதாகவும் காலம்வரும்போது எம்மினத்தினதும் மொழியினதும் நலனுக்காக [illegible] புரிவேன் என்றும் கூறினார்.

அமெரிக்க நிபுணர் பயிற்சியளிப்பார்

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் உள்ள திருவை ஆற்றில் இன்று முதல் 12 வயதுக்கும் 18 வயதுக்கும் உட்பட்ட இளைஞர்களுக்கு நீச்சல் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

[illegible] இளைஞர் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் இப்பயிற்சியினை அமெரிக்க வை எம் சி ஏ நிபுணர் திரு கெவின் ஹாரிற் அளிப்பார்.

இந் நீச்சல் போட்டியில் வெற்றி பெறுவோர்க்குப் பட்டினசபைத் தலைவர் திரு சு. முருகேசு பரிசுகளை வழங்குவர் என்று திரு டாக்டர் போதபாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

புனரமைப்பு கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

புங்குடுதீவு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க புனரமைப்புக் கூட்டம் கொழும்பு கொம்பனித்தெரு [illegible] மேல்மாடியில் திரு. எஸ். நமசிவாயம் தலைமையில் நடைபெற்றது. வித்தியாலய ஆசிரியர் திரு சி. மாணிக்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

புதிய நிர்வாகிகள் தெரிவின்போது தலைவர் எஸ் நமசிவாயமும், உபதலைவர்களாக செ. சிவபாதசுந்தரம், ஏ. நடராசா ஆகியோரும் செயலாளராக என். சோமசுந்தரம்பிள்ளையும் உதவிச் செயலாளர்களாக எஸ். கே. மகேந்திரன், கே. செந்தில்முருகன் ஆகியோரும் பொருளாளராக ஏ. சிதம்பரநாதனும் துணைப்பொருளாளர்களாக கே. முத்துலிங்கம், க. சண்முகசுப்பிரமணியம் ஆகியோரும் தெரிவாகினர். செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரிய சங்க யாழ் கிளையின் விசேட பொதுக்கூட்டம் இம்மாதம் 25ம் திகதி யாழ். கோப்பாய் நாவலர் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. திரு மு இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் வட்டாரக் கல்வியதிகாரி திரு. பி சச்சிதானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வேலை நேரத்தை வெளியில் கடத்த முடியாது

கொழும்பு, புதன்

வேலைநேரங்களில் தங்கள் இருப்பிடங்களில் இல்லாது போகின்ற ஊழியர்களின் ஒழுங்கீனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவிருக்கிறது. கைத்தொழில் அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், எழுதுவினைஞர்கள் வேலைநேரங்களில் தங்களுக்குரிய இடங்களில் இருக்க நிர்ப்பந்திக்கும் நடவடிக்கையை கைத்தொழிலமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு சிவநாதன் எடுத்துள்ளார்.

ஒவ்வொரு ஊழியர்களும் வேலைக்குவரும்பொழுது அங்கிருக்கும் உயர் அதிகாரிக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் வரவு இடாப்பில் கையொப்பமிட வற்புறுத்தப்படும். உயர் அதிகாரிகள் வேலைக்கு வரும் நேரத்தை நிரந்தரச் செயலாளர் முன்னிலையில் பதியவேண்டும். அவர்களுக்கான வரவு டாப்புப்புத்தகம் நிரந்தரச் செயலாளரின் அறையிலேயே வைக்கப்படுமாம். நிரந்தரமாக தாமதமாக வேலைக்குவரும் பழக்கமுடையவர்கள்மீது ஒழுக்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், திடீரென விடுமுறை எடுக்கவேண்டி ஏற்படுபவர்கள் தங்கள் விடுமுறை விண்ணப்பத்தோடு, உயர் அதிகாரிகள் பதில் அனுப்புவதற்கான கட்டணத்தோடு தந்திகளை அனுப்பவேண்டுமெனவும் தெரியவருகிறது. (ச)

இந்து கலாசார நிலைய

கட்டிட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கும்

கொழும்பு, புதன்

இந்து கலாசார நிலையக் கட்டிடவேலைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அகில இலங்கை இந்துமாமன்றம் மேற்கொண்டுள்ளது. இதற்கான கட்டிடத் திட்டப் படங்கள் கிடைக்கச் சுணங்கியதாலும் போதியபணம் சேராமையினாலுமே கட்டிடவேலைகள் பின்போடப்பட்டதாகவும், இப்போது 1 ரூபா, 2 ரூபா, 5 ரூபா, 10 ரூபா டிக்கெட்டுகள்மூலம் நிதிசேகரிக்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இதற்கான பிரசாரங்கள் பல இடங்களிலும் நடைபெற்று வருவதாயும் கிழக்கு மாகாணம் ஒருமாடியை நிறைவேற்றி உதவுவதாக உறுதியளித்துள்ளதாயும் மன்றம் தெரிவிக்கிறது.

ஏற்கனவே ஒருலட்ச ரூபா சேர்ந்துள்ளதாயும் இன்னும் ஒருலட்சரூபா சேர்ந்தால் கட்டிடவேலைகளைப் பூர்த்தி செய்யமுடியுமென்றும் மன்ற அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்திற்கு கொழும்பு சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் அரசாங்கம் [illegible] நிலம் வழங்கியிருப்பதும் பலமாடிகளைக்கொண்ட உத்தேசக் கட்டிடத்திற்கு 70-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அடிக்கல் நாட்டப்பட்டதும் தெரிந்ததே.

சிரமதானம்

யாழ்ப்பாணம், வியாழன்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் வீதி சிரமதான வேலைகள் இன்று நடைபெறுகின்றன. இன்று காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறும் இச் சிரமதானப் பணியில் பல நூற்றுக்கணக்கான தொண்டர்கள் கலந்து கொண்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான வேலையை முடித்துவைப்பர். கரைச்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. இ. போகநாதன் தலைமையில் கரைச்சிக் கிராமசபைத்தலைவர் திரு சு. செல்லையா குத்துவிளக்கேற்றிச் சிரமதானத்தை ஆரம்பித்து வைப்பார். கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். திரு ஆர். சி. சுப்பிரமணியம் தொண்டர்களை வரவேற்றுப் பேசுவார்.

……

பாதுகாப்பு ஊழியர்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை களஞ்சியம் ஒன்றிலிருந்து சுமார் 500 ரூபா பெறுமதியான பொருட்களை சில தொழிலாளர்கள் இரவு நேரத்தில் களவாடிச் செல்லும் சமயம் காவல் காத்து நின்ற பாதுகாப்பு சேவை ஊழியரான கே. சேதஸ்வரநாதன் அவர்களைப் பிடித்தாராம்.

இதையடுத்து பிரஸ்தாப நபர்கள் காங்கேசன்துறைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் இதுபற்றி விசாரணை நடாத்தி மல்லாகம் நீதிபதி முன் ஆஜர் செய்தனர்.

வெள்ளைக் கடதாசி தாராளமாகக் கிடைக்கும்

யாழ்ப்பாணம், வியாழன்

பாடசாலைகளுக்குத் தேவைப்படும் [illegible] கடதாசிகள் இப்பொழுது தாராளமாகக் கிடைப்பதாகத் தெரிகின்றது.

வேலைத்திட்டங்கள் தயாரிப்பதற்கு தேவையான இக் கடதாசிகளுக்கு கடந்த சில நாட்களாக பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இந்த வெள்ளை இரட்டிப்புக் கடதாசிகள் இப்பொழுது யாழ் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் இப்பொழுது பெருமளவில் வந்திறங்கியிருப்பதாகத் தெரிகிறது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.